26.09.15

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு

கர்நாடகாவில் கனமழை பெய்துவருவதன் காரணமாக, மேட்டூர் அணையில் நீர்வரத்து உயர்ந்துள்ளது. இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: - மேட்டூர் அணை நீர்மட்டம் தற்போது 66.66 கன அடியாக உள்ளது. நீர் இருப்பு 29.89 கன அடியாக இருக்கிறது. அணைக்கு வரும் நீரின் அளவு 8,339 கன அடியிலிருந்து 15,060 ஆக உயர்ந்துள்ளது. டெல்டா பாசனத்திற்கு திறந்துவிடப்படும் நீரின் அளவு 13ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டுதல் பயிற்சி

ஆரணியில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் மூலம் வேளாண் விளைபொருள்களை சந்தைப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் ஆரணி, மேற்கு ஆரணி வட்டாரத்தைச் சேர்ந்த 80 விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆரணி வட்டார தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் வரவேற்றார். விவசாயிகள் குழுக்கள், ஆர்வலர் குழுக்கள் அமைத்து தானிய, இதர விளை பொருள்களுக்கான சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல், மஞ்சள், வாழை போன்ற பயிர்களில் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்து சந்தைப்படுத்துதல் குறித்து குழு சார்ந்த விவசாயிகளுக்கு பயிற்சிகள் குறித்து வேளாண்மை அலுவலர் எழிலரசு விளக்கினார். மேற்கு ஆரணி வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் தேவேந்திரன், உதவி வேளாண் அலுவலர்கள் சங்கர், வெங்கடேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அரியலூரில் செப். 30ல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் செப். 30(புதன் கிழமை) அன்று மாவட்ட ஆட்சியரக பிரதான கூட்டரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 3.86 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த செப். 1 முதல் 21 வரை நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் 3.86 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக ஆட்சியர் சு. கணேஷ் தகவல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி 9ஆவது சுற்று முகாம் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் செப். 1 முதல் 21ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் ரூ. 30.93 லட்சம் செலவில் 3 லட்சத்து 86 ஆயிரத்து 659 கால்நடைகளுக்கு (பசு: 3,82,158, எருமை: 4501) தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய விலையில் ஜிப்சம் வழங்க வலியுறுத்தல்

மானிய விலையில் ஜிப்சம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென புதுக்கோட்டையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை கேட்புக்கூட்டத்துக்கு ஆட்சியர் (பொ) சு. மாரிமுத்து தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் பால்வடிவு, நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் எஸ்.

சோமசுந்தரம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்: ஜி.எஸ். தனபதி: அறிவிக்கப்படாத மின்தடையால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். வேலிக்கருவேல மரங்கள் அகற்றும் பணி தொய்வடைந்துள்ளது. அரசு நிலங்களில் வேலிக்கருவேல மரங்கள் அகற்றப்படாத நிலை நீடிக்கிறது. எனவே மாவட்ட நிர்வாகம் வேலிக்கருவேல மரங்களை அகற்றுவதற்கு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டும். செல்லத்துரை (தென்னை உற்பத்தியாளர் நிறுவனம்): தமிழகத்தில் தேனி, புதுக்கோட்டை மாவட்டத்தில் தான் தென்னை உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் வளர்ச்சி அதிகரிக்க வேளாண் அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தென்னை மரங்கள் கணக்கீடு செய்வதில் உள்ள குளறுபடிகளைக் களைய வேண்டும். சி. அப்பாவுபாலாண்டார்: வேலிக்கருவேல மரங்களை அகற்றும் விவகாரத்தில் ஊராட்சித் தலைவர்கள் சரிவர செயல்படவில்லை. தினகரசாமி: மானிய விலையில் ஜிப்சம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தங்கராஜ்: தங்களது பகுதி விவசாயிகளின் குறைகளுக்கு உடனடித் தீர்வு காணும் வகையில் குறைகேட்புக் கூட்டங்களில் வட்டார உதவி இயக்குநர்கள், வேளாண் அலுவலர்கள் பங்கேற்க வேண்டும். தினகரன் (காந்தி சமூக நலப்பேரவை நிறுவனத் தலைவர்): குறைகேட்புக் கூட்டங்கள் பெயரளவுக்கு நடைபெறாமல், விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். சண்முகம்: விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஆலங்குடியில் உழவர் சந்தை அமைக்க வேண்டும். சேகர்: நீர்பழனி இந்தியன் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகள் ஏலம் விடும் நிகழ்வை மண்டல அலுவலகத்தில் நடத்துகின்றனர். இதை அனுமதிக்கக் கூடாது. திருமயம் நாகையா: திருமயம் தாலுகாவில் பருவமழை பொய்த்து போனதால் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் வறட்சி நிவாரணம், பயிர்காப்பீடு வழங்குவதில் திருமயம் தாலுகா புறக்கணிக்கப்பட்டுள்ளது. மிசாமாரிமுத்து: காவிரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்ட விவகாரத்தில் தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். நீர் பாசனக் குழுக் கூட்டம் இதுவரை நடத்தப்படாதது ஏன். குளங்கள்

கண்மாய்கள் குறித்து விவரங்கள் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். முருகேசன்: சிட்டா அடங்கல் வாங்குவதில் விவசாயிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர். எனவே மீண்டும் தாலுகா அலுவலகங்களிலேயே சிட்டா அடங்கலை வழங்க வேண்டும். இதைத் தொடர்ந்து விவசாயிகளின் கேள்விகளுக்கு அந்தந்தத் துறை அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஏரி மதகு அடைப்பு பொருத்த விவசாயிகள் கோரிக்கை</u>**

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் அடுத்த, மதுரமங்கலம் பகுதியில் உள்ள ஏரி மதகில் அடைப்பு பொருத்த, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஸ்ரீபெரும்புதுார் ஒன்றியத்திற்கு உட்பட்ட மதுரமங்கலம் ஏரி, 350 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில், நான்கு மதகுகள் உள்ளன. இவற்றில் பொருத்தப்பட்ட அடைப்பு, சில ஆண்டுகளுக்கு முன் திருடப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. இன்னும் மதகுகளில் அடைப்பு பொருத்தப்படவில்லை. இதனால், மழை பெய்து ஏரிக்கு தண்ணீர் வந்தால், சேமித்து வைக்க முடியாத சூழல் ஏற்பட்டு உள்ளது. பொதுப்பணி துறை பராமரிப்பில் உள்ள இந்த ஏரியை நம்பி, 600 ஏக்கர் பாசன பரப்பளவு உள்ளது. தற்போது ஏரியில் தண்ணீர் இல்லாத போதே ஏரியை சீரமைத்து, மதகுகளில் அடைப்பு பொருத்த, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>சிறுதானிய உணவு கையேடு வெளியீடு</u>

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நேற்று ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகள்: * பூண்டி ஒன்றியம், திருப்பேர் ஊராட்சியில், ஆக்கிரமிக்கப்பட்டு உள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலத்தை மீட்க வேண்டும்.

* மாவட்டத்தில் நடப்படும் மரக்கன்றுகளை ஆடு, மாடுகள் மேய்ந்து விடாமல் தடுக்க, வேலி அமைக்க வேண்டும்

* புன்னப்பாக்கம் கொற்றலை ஆற்றில், அளவுக்கு அதிகமாக மணல் எடுப்பதை தடுக்க வேண்டும்

* பூண்டி நீர்த்தேக்கத்தை துார்வார வேண்டும்

* கரும்பு விவசாயிகளுக்கு வரவேண்டிய நிலுவை தொகை, 20 கோடி ரூபாய் இதுவரை கிடைக்கவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள், ஆட்சியரிடம் முன்வைத்தனர். இதுகுறித்து பதில் அளித்து ஆட்சியர் பேசியதாவது: கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையான, 20 கோடியில், ஆறு கோடி ரூபாயை வரும், 30ம் தேதிக்குள் வழங்குவதாக, சர்க்கரை ஆலையினர் தெரிவித்து உள்ளனர். மீதம் உள்ள தொகை, விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். திருப்பேர் ஊராட்சியில் ஆக்கிரமிப்புகள் ஒரு மாதத்தில் அகற்றப்படும். புன்னப்பாக்கம் ஏரியில் பொதுப்பணி துறையினர் ஆய்வு செய்து, அறிக்கை அளிக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.இக்கூட்டத்தில், சிறுதானிய உணவுகளால் தயாரிக்கப்படும் உணவு முறைகள் குறித்த கையேடு வெளியிடப்பட்டது.

## <u>கரும்புக்கான நிலுவைத்தொகை 28ம் தேதி ரூ.25 கோடி வழங்க முடிவு</u>

ஈரோடு: கரும்புக்கான நிலுவைத்தொகை, 25 கோடியை, 28ம் தேதி வழங்குவதாக, சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். ஈரோடு கலெக்டர் பிரபாகர் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில், கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் சென்னியப்பன் கூறியதாவது: சக்தி சர்க்கரை ஆலையில், கரும்பு வழங்கியதற்காக, 60 கோடி ரூபாய் பாக்கி உள்ளது. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்துள்ள விவசாயிகளுக்கு, 40 சதவீதம் மட்டுமே பணத்தை தருகின்றனர். ஆனால், ஆலை நிர்வாகம் சார்பில் உற்பத்தியான சர்க்கரை, மின்சாரம், சாராயம் போன்றவைகளை விற்பனை செய்து, பணமாக்கிவிடுகின்றனர். கடந்த மார்ச் மாதம்

வழங்கிய கரும்புக்குக்கூட தொகை வழங்கப்படவில்லை. அடுத்த அரவை பருவம் விரைவில் துவங்க உள்ளது. நடப்பு பருவத்துக்கான கரும்புக்கான தொகையை வழங்கினால் மட்டுமே, அடுத்த பருவத்துக்கான அரவையை துவங்க வேண்டுமென, கலெக்டர் உத்தரவிட வேண்டும். தவிர, கரும்புக்கு, 2,350, 2,850 என பாரபட்சமான விலை வழங்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். கலெக்டர் பிரபாகர்: கடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டபடி, ஆலை நிர்வாகம் நிலுவைத் தொகை வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். சர்க்கரை ஆலை நிர்வாகம்: சக்தி சர்க்கரை ஆலைகளின் மொத்த பாக்கி, 59 கோடி. இதில், ஏற்கனவே, 15 கோடி வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள, 44 கோடியில், 25 கோடி ரூபாயை, 28 ம் தேதி வங்கி கடனுக்காக வழங்க உள்ளோம். ஜூன் இறுதி வரை கரும்பு கொடுத்தவர்களுக்கு பணம் வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள, 18 கோடி விரைவில் வழங்கப்படும், என்றார்.

**த.மா.கா., விவசாய அணி நிர்வாகிகள் நியமனம்**

கோத்தகிரி:நீலகிரி மாவட்ட த.மா.கா., விவசாய அணி மாவட்ட நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.அதன்படி, மாவட்ட தலைவராக ராஜு, மாவட்ட துணை தலைவர்களாக ஐயப்பன், விஜய்சிங்கம், ராம்குமார், பீமன், மாவட்ட பொதுசெயலாளர்களாக சந்திரபோஸ், மணி, பிரபு, மாவட்ட பொருளாளராக ரங்கசாமி, மாவட்ட செயலாளர்களாக சண்முகம், சந்திரன், துரை, வட்டார தலைவர்களாக ரவி - ஊட்டி, நடராஜ் - கீழ்கோத்தகிரி, மணி - கோத்தகிரி, சந்திரசேகர் - குன்னூர் ஆகியோர், நியமிக்கப்பட்டுள்ளனர்.

**தேயிலை விலையில் இறங்குமுகம் மீண்டும் அதிகரிக்கும் காய்கறி விவசாயம்**

மஞ்சூர்:தேயிலைக்கான விலை நாளுக்குநாள் குறைந்து வருவதால், பல ஏக்கரில் தேயிலை தோட்டம்அழிக்கப்பட்டு, மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வந்தாலும், மலை காய்கறி விவசாயமும் அதிகரித்து வருகிறது. பசுந்தேயிலைக்கு போதிய விலை கிடைக்காத தால், பெரும்பாலான பகுதியில் பல ஏக்கரில் தேயிலை தோட்டம்

அழிக்கப்பட்டு, மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருவதுகிறது.இத்தலார் பகுதியை சேர்ந்த விவசாயி பழனிசாமி கூறுகையில்,“தேயிலை தொழில் பாதிக்கப்பட்டதை அடுத்து, மீண்டும் மலை காய்கறிகள் விவசாயம் அதிகரித்து வருகிறது. மேலும், தேயிலை தோட்டத்தின் நடுவே ஊடுபயிராக மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு மானியம் மூலம் பல்வேறு உதவிகளை அளிக்க முன்வந்தால், மலை காய்கறி விவசாயத்தை மேலும் ஊக்கப்படுத்தலாம்,” என்றார்.

## உபாசியின் புதிய நிர்வாகிகள் தேர்வு

குன்னூர்:தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். குன்னூர் தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கத்தின், 122வது மாநாடு நடந்தது. இதுவரை உபாசி தலைவராக விஜயன் ராஜேஷ் இருந்தார். இந்த மாநாட்டில், இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில், ஹாரிசன் மலையாளம் பிளான்டேஷன் தலைமை செயல் அதிகாரி தர்மராஜ் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணை தலைவராக வினோத் சிவப்பா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர், கர்நாடக தோட்ட தொழில் அதிபர்கள் சங்க தலைவராகவும் இருந்துள்ளார்.

## பசுமை தீர்ப்பாய உத்தரவுப்படி மண், நீர் மாதிரி சேகரிப்பு

வத்தலக்குண்டு: எழுவணம்பட்டியில் தனியார் சாய தொழிற்சாலை அமைந்துள்ளது. தமிழக மெங்கும் சாய கழிவுகளால் மாசு ஏற்படுவதால் அனைத்து சாய தொழிற்சாலைகளுக்கும் அரசு "சீல்' வைத்தது. இந்த ஆலையால் நிலத்தடி நீர், மண் ஆகியவை மாசு அடைந்து வருவதாகவும், குழந்தைகள் பிறப்பில் குறைகள் ஏற்படுவதாகவும் கடந்த 5 ஆண்டுகளாக விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம் ஆலையை மூடுவதற்கு போராடி வருகிறது. 2010ல் மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. 2013ல் ஐகோர்ட் இந்த வழக்கை பசுமை தீர்ப்பாயத்திற்கு மாற்றியது.

வழக்கை விசாரித்த தீர்ப்பாயம் பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலை மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை பேராசிரியர்

சீனிவாசமூர்த்தி, ஐதராபாத் வேளாண் பொருளாதாரத்துறை முதன்மை விஞ்ஞானி ராமராவ் ஆகியோரை நியமித்து மண் மற்றும் கிணற்று நீரை ஆய்வு செய்ய உத்தரவிட்டது. இவர்கள் கடந்த 2 நாட்களாக 28 கிணறுகளில் மாதிரிகளை சேகரித்தனர். கோட்டார்பட்டி பகுதி கிணறுகளிலும் மாதிரிகளைச் சேகரிக்கப்பட்டன.

## வெண்டை வரத்து குறைவு சந்தையில் விலை உயர்வு

பழநி: பழநிபகுதியில் வெண்டைக்காய் விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளதால் வரத்துஇல்லாமல் சந்தையில் விலை உயர்ந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டம் பழநி, சத்திரப்பட்டி, பாலசமுத்திரம், கணக்கன்பட்டி, குதிரையாறுஅணை, ஆண்டிப்பட்டி, பாப்பம்பட்டி உள்ளிட்ட இடங்களில் வெண்டைக்காய் பயிரிடப்படுகிறது. கடந்த சில மாதமாக மழை இல்லாத காரணத்தால் போதிய தண்ணீர் இல்லாமல் வெண்டைச் செடியில் தரமின்றி காய்க்கின்றன. விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளது. இதனால் உழவர்சந்தை வெளிமார்க்கெட்டிற்கு வெண்டைக்காய் வரத்து கடந்த ஒரு வாரமாக குறைந்துள்ளது. இதனால் 15 நாட்களுக்கு முன் ஒருகிலோ ரூ.8க்கு விற்ற வெண்டைக்காய், தற்போது ரூ.18 முதல் ரூ.20க்கு விற்கிறது. விலைகிடைத்தாலும் விளைச்சல் இல்லாத காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தாண்டிக்குடியில் 47.மி.மீ., மழை

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் நேற்று முன்தினம் இரவு இடி மின்னலுடன் ஒரு மணி நேரம் கனமழை பெய்தது. கடந்த ஒரு வாரமாக வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. நேற்று முன்தினம் இரவு துவங்கிய மழை ஒரு மணி நேரம் வெளுத்து வாங்கியது. சூறைக்காற்று மற்றும் இடி, மின்னல் நீடித்த நிலையில் மின்சப்ளை பாதித்தது. இதையடுத்து தாண்டிக்குடி உள்ளிட்ட கீழ்மலை கிராமங்கள் விடிய, விடிய இருளில் மூழ்கின. கொடைக்கானல்-பண்ணைக்காடு மின்பாதையில் ஏற்பட்ட இடையூறு களை சரிசெய்து நேற்று மாலை 3 .30 மணிக்கு சப்ளை சீரனாது. மின்னலின் தாக்கத்தால் தாண்டிக்குடி, பண்ணைக்காடு பகுதியில் இரு

டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்தது. டிரான்ஸ்பார்ம் பழுதால் அருகிலிருக்கும் மற்றொரு டிரான்ஸ்பார்ம் மூலம் கூடுதலாக தாண்டிக் குடிக்கு மின்னழுத்த குறைபாட்டுடன் சப்ளையளிக்கப்பட்டது. தாண்டிக்குடியில் அதிகபட்சமாக 47.மி.மீ., தடியன்குடிசையில் 30.மி.மீ., மழையும் பதிவாகியது.

**<u>கோமுகி அணையில் நீர்மட்டம் "கிடுகிடு' உயர்வு</u>**

கச்சிராயபாளையம்: கல்வராயன்மலையில் பெய்த கன மழையால், கோமுகி அணைக்கு நீர் மட்டம் அதிகரித்துள்ளது. கச்சிராயபாளையம் அடுத்த கல்வராயன்மலையின் அடிவாரப் பகுதியில் கோமுகி அணை உள்ளது. பருவ மழை துவங்கி பல நாட்களாகியும், போதிய மழை பெய்யாததால், அணையில் நீர்மட்டம் குறைவாகவே இருந்தது. இப்பகுதியில் சம்பாசாகுபடிக்கான நாற்றங்கால் அமைக்கும் பணிகள் துவங்கி நிலையில், அணை நீர்மட்டம் உயராததால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில் கடந்த 23ம் தேதி இரவு கல்வராயன்மலை பகுதியில் பலத்த மழை பெய்தது. கல்வராயன் மலைப்பகுதியில் உற்பத்தியாகும் பரங்கிநத்தம், பொட்டியம், கல்படை ஆகிய மூன்று ஆறுகளின் வழியாக விநாடிக்கு 215 கன அடி, செம்மண் கலந்த தண்ணீர் கோமுகி அணைக்கு வரத் துவங்கியது. அணையின் மொத்த கொள்ளளவான 46 அடி உயரத்தில்(561 மி.கன அடி), தற்போது 32 அடி (180 மி.கனஅடி) அளவிற்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நீண்ட நாட்களுக்கு பிறகு, அணைக்கு தண்ணீர் வரத் துவங்கியுள்ளதால், இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>கள்ளக்குறிச்சியில் பூச்செடிகள் விற்பனை</u>**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் விற்பனை செய்யப்படும் ஓசூர் பூச்செடிகளை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர். ஒசூரிலிருந்து கல் ரோஸ், பட்டன் ரோஸ், ஜாதி மல்லி, செம்பருத்தி, குண்டு மல்லி, அரளிச்செடி உள்ளிட்ட பல்வேறு வகை யான பூச்செடிகள் கள்ளக்குறிச்சிக்கு வரவழைத்து விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் மாதுளம், கொய்யா உள்ளிட்ட பழமரக் கன்றுகள் கொண்டு வரப்பட்டு, கள் ளக்குறிச்சியில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு பூச்செடி

ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது. சிறிய வகை செடி களிலும் பல்வேறு வண்ணங்களில் அழகிய ரோஜா பூக்கள் பூத்திருந்தது, பொதுமக்களை பெரிதும் கவர்ந்தது. கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை அருகே சாலையோரம் விற்பனை செய்யப்பட்ட பூச்செடிகளை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.

**<u>வெயில் வாட்டி வதைப்பதால் எலுமிச்சை விற்பனை அமோகம்</u>**

கரூர்: கரூர் நகரம் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில், கடும் வெப்பம் நிலவுவதால், எலுமிச்சை பழம் விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது.

தமிழகம் முழுவதும், பருவமழை இந்தாண்டு சராசரியை விட குறைந்துள்ளதால், பல்வேறு இடங்களில் வெளியே தலைகாட்ட முடியாத அளவுக்கு, வெயில் வாட்டி வதைக்கிறது. உடல் சூட்டை தணிக்கவும், குளிர்ச்சி பொருந்திய எலுமிச்சைப் பழத்தை வாங்க பொதுமக்கள் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். சாதாரண கடைகளில் எலுமிச்சை ஜூஸ், தலா, ஒரு டம்ளர், 10 முதல், 15 ரூபாய் வரை விற்கின்றனர். சாதாரண மக்கள் கடைகளில் எலுமிச்சை பழத்தை வாங்கிச் சென்று ஜூஸ் போட்டு, குடும்பத்தில் உள்ள அனைவரும் அருந்துகின்றனர். இதனால், கரூர் நகரில் எலுமிச்சை விற்பனை களைகட்டியுள்ளது. இதில், ஜவஹர் பஜார், மார்க்கெட், உழவர் சந்தை, சி.எஸ்.ஐ., சர்ச் கார்னர், கோவை ரோடு பகுதிகளில் எலுமிச்சை பழம் விற்பனை, தள்ளுவண்டி களில் அமோகமாக நடக்கிறது. இதுகுறித்து, எலுமிச்சை பழம் விற்கும் வியாபாரி குருநாதன் கூறியதாவது: திண்டுக்கல் சுற்றுப்பகுதியில் விற்கும் எலுமிச்சை பழங்கள் வேன்கள், லாரிகள் மூலம் லோடு ஏற்றப்பட்டு, பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்கின்றனர். அதேபோல், கரூருக்கும் கொண்டு வருகின்றனர். எலுமிச்சை மண்டி அல்லது பொது இடத்தில் வைத்து கொடுக்கப்பட்டு, அங்கிருந்து வியாபாரிகள் தங்களுக்குத் தேவையான எலுமிச்சை பழத்தை வாங்கிச் செல்கின்றனர். கோடை காலம் என்றாலே, எலுமிச்சைக்கு நல்ல கிராக்கி இருக்கும். ஆனால், தற்போது பொதுமக்களுக்கு தேவை அதிகமானதால், சற்று விலை உயர்த்தி விற்க வேண்டி உள்ளது. பழங்களை நான்கு ரகமாக பிரித்து, இரண்டு ரூபாய் முதல், ஏழு ரூபாய் வரை விற்கிறோம்.

வரத்து குறைந்து, தேவை அதிகரித்துள்ளதால், விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## அமராவதி தண்ணீர் திறப்பு: 3 மாதம் நீடிக்க கோரிக்கை

க.பரமத்தி: அமராவதி அணையில் இருந்து, பாசனத்துக்காக திறந்து விடப்பட்ட தண்ணீர், தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அமராவதி அணை, கரூர் மற்றும் மற்ற மாவட்டங்களுக்கு பாசன விவசாயத்துக்கு, கடந்த, 18ம் தேதி, அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. அவை, உடுமலைப்பேட்டையில் இருந்து, கிணத்துக்கடவு, தாராபுரம், குண்டடம் வழியாக நேற்று முன்தினம் சின்னதாராபுரம் அடுத்த, கொத்தப்பாளையம் அணையை தொட்டது. முதல்கட்டமாக விவசாயத்திற்கு, 10 நாட்களுக்கு திறந்து விடப்பட்டது. தென்மேற்கு பருவமழை பெய்வதைப் பொறுத்து, தொடர்ந்து தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். திறக்கப்பட்ட தண்ணீரால், 20 ஆயிரம் ஏக்கர் பாசனம், கடைமடைப்பகுதி வரை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தில் சின்னதாராபுரம் புளியம்பட்டி, ராஜபுரம் உள்ளிட்ட பகுதியில், தற்போது நெல், வாழை, கரும்பு, மஞ்சள், ஆமணக்கு உள்ளிட்ட பயிர்கள் முழுமையாக மகசூல் பெற வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது. எனவே, 'பொதுப்பணித்துறையினர் அணையின் நீர்மட்டத்தை கணக்கில் கொள்ளாமல் விவசாயம் செழிக்க, தொடர்ந்து மூன்று மாதம், தண்ணீர் வழங்க வழிவகை செய்ய வேண்டும்' என்று, விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெற்றிலை சாகுபடி ஊடுபயிராக முருங்கை

லாலாபேட்டை: கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் பஞ்., யூனியனுக்குட்பட்ட கண்ணப்பள்ளி, பிள்ளபாளையம், கருப்பத்தூர், மகளிப்பட்டி ஆகிய பகுதிகளில் வெற்றிலை சாகுபடி நடந்து வருகிறது. இந்த பயிருக்கு இடையில் ஊடுபயிராக வெற்றிலை கொடிக்காலுக்கு இடையில் முருங்கைக்காய் செடி பயிரிடப்படுகிறது. தற்போது, சீசன்

துவங்கிய நிலையில், முருங்கை காய் விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் மார்க்கெட்டில் ஐந்து காய்களை கொண்ட கட்டு, 5 ரூபாயிலிருந்து, 10 ரூபாயாக உயர்ந்துள்ளது. தற்போது வெற்றிலை கொடிக்கால் அழிக்கப்பட்டு, புதிதாக விதை நடும் பணி நடந்து வருகிறது. அதனால், ஊடு பயிராக முருங்கை செடி நடும் பரப்பளவு அதிகரித்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு பிறகு முருங்கைகாய் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

**<u>கிரீம்சன் சீட்லெஸ்' திராட்சை சாகுபடிக்கு தயார் கனமழையையும் தாங்கி வளரும் புதிய ரகம்</u>**

கம்பம்,: கனமழையையும் தாங்கி பழங்கள் வெடிக்காமல் இருக்கும் "கிரீம்சன் சீட்லெஸ்' ரகத்தை சாகுபடி செய்ய கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். சர்வதேச அளவில் திராட்சை சாகுபடியில் முக்கிய இடத்தை பிடித்துள்ள கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில், ஆண்டுமுழுவதும் திராட்சை கிடைத்து வருகிறது. இப்பகுதி யில் விளையும் திராட்சையில் செவட்டை நோய் தாக்குதலும், மழை காலங்களில் பழங்கள் உடைந்து போவதும் விவசாயிகளுக்கு பெரும் தலைவலியாக இருந்து வருகிறது. சமீபத்தில் ஆனைமலையன்பட்டியில் துவக்கப்பட்டுள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையம் திராட்சை சாகுபடியில் புதிய ரகங்களை அறிமுகம் செய்துள்ளது. அங்கு புதிய ரக திராட்சை செடிகளின் வேர்க்குச்சிகள் விற்கப்படுகிறது. இதற்கிடையே, ஏற்றுமதிக்கு உகந்த "கிரீம்சன் சீட்லெஸ்' ரகம் குறித்து திராட்சை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா கூறியதாவது : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில், மழை காலங்களில் திராட்சை பழங்கள் வெடிப்பது பெரும் பிரச்னையாக உள்ளது. மழையை தாங்கி பழங்கள் உடையாமல் இருக்க கூடிய "கிரீம்சன் சீட்லெஸ்' என்ற புதிய ரகம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இந்த ரக திராட்சை செடிகள் 150 நாட்கள் வரை அறுவடைக்கு காலம் எடுத்துக் கொள்ளும். இது "பிங்க்' நிறத்தில் சதைப்பிடிப்புடன் கூடிய நீர்ச்சத்து குறைவான உண்பதற்கு ஏற்ற ரகமாகும். ஏற்றுமதிக்கு சிறந்தது. ஒரு ஏக்கருக்கு 10 டன் வரை விளைச்சல் கிடைக்கும், என்றனர். சீசன் இல்லாத ஜூன் முதல் அக்டோபர் வரை இந்த புதிய ரகங்களை சாகுபடி

செய்து தர ஏற்றுமதியாளர்கள், கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

**<u>கோடை மாங்காய் சீசன் தொடக்கம்</u>**

பெரியகுளம்,: பெரியகுளம் பகுதியில் கோடை மாங்காய் சீசன் துவங்கியுள்ளது. ஒரு டன் 50 ஆயிரம் ரூபாய் விலை விற்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பெரியகுளம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளான சோத்துப்பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை, செழும்பு, தொண்டைகத்தி, புலிக்கூடு, கோயில்காடு, முருகமலை, வரட்டாறு, கருங்கல் உட்பட பல பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான பரப்பில் மா சாகுபடி செய்யப்படுகின்றன. பெரியகுளம் காளைபாடி, மல்கோவா, பங்கனபள்ளி, சப்போட்டா, காசாகாய், நாட்டுக்காய் உட்பட பல வகையான காய்கள் அறுவடை செய்யப் படுகின்றன. பெரியகுளம் மாங்காய் சுவை அதிகம் என்பதால் அனைத்து ஊர்களிலும் வரவேற்பு பெற்றுள்ளது. அனைத்து வகையான மாங்காய்கள் எடுக்கப்பட்ட நிலையில் ஜூலை மாதம் சீசன் முடிந்தது. இந்நிலையில் ஜூன் மாதம் பூபூத்த கோடை மாங்காய் வரத்து துவங்கியுள்ளது. சீசன் நேரத்தில் காசாமாங்காய் 1 டன் 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது கோடையின் ஆரம்பத்தில் காசா விலை 1 டன் 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. பிற ரக மாங்காய்கள் சில வாரங்களில் அறுவடைக்கு வரும். காசாலட்டு மாங்காய்கள் அதிகளவில் கேரளாவிற்கும், தமிழ்நாட்டின் பிற ஊர்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

**<u>பெரியாறு அணையில் மழை</u>**

கூடலூர்: கடந்த சில தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் மழையின்றி, அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால், அணைக்கு நீர்வரத்து 914 கன அடியாக அதிகரித்தது. நீர்மட்டம் 115.50 அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 700 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 1817 மில்லியன் கன அடியாகும்.

நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது. மழையளவு (மி.மீ.,): பெரியாறு 24.6, தேக்கடி 21.8, கூடலூர் 23.8, சண்முகாநதி 15, உத்தமபாளையம் 30, வீரபாண்டி 26, வைகை அணை 21.2, மஞ்சளாறு 66, மருதாநதி 12, சோத்துப்பாறை 34, கொடைக்கானல் 15.

## <u>எண்ணெய் வித்து மரம் வளர்ப்பு எக்டேருக்கு ரூ.20 ஆயிரம் மானியம்</u>

சிங்கம்புணரி,: சிங்கம்புணரி வட்டாரத்தில் தேசிய எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தில் மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது. சிங்கம்புணரி ஒன்றியத்தில் 12 எக்டேர் புளி,வேம்பு, இலுப்பை ,மரம் வளர்க்க வேளாண்மை துறையினர் திட்டமிட்டுள்ளனர்.எக்டேருக்கு 400 வேம்பு கன்று நடவிற்கு ரூ 17 ஆயிரம்,இலுப்பை 200 கன்று நடவிற்கு ரூ 15 ஆயிரம்,புங்கன் 500 கன்று நடவிற்கு ரூ 20 ஆயிரம் மானியம் கிடைக்கும். குழி எடுத்து நடவேண்டும். நடவு முடிந்தவுடன் வேளாண் அலுவலர்கள் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட விவசாயிகள் வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும் என வேளாண்மை உதவி இயக்குனர் பாலமுருகன் தெரிவித்தார்.

## <u>விவசாயிக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வினியோகம்</u>

துக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் வேளாண் இடுபொருள்கள் மற்றும் வேளாண் கருவிகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயபாலன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நடப்பு நிதியாண்டில் விவசாயிகளின் முன்னேற்றத்துக்காக வேளாண்துறை மூலம் பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சம்பா பருவத்தில் நெல் நடவை இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ. 3000 மானியம் வழங்கப்பட உள்ளது. திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் கோனாவீடர் பயன்படுத்தி களை எடுப்பதிற்காக 50 சதவீத மானிய விலையில் கோனாவீடர் களைக் கருவிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சம்பா நடவு செய்வதற்கு முன்னர் பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பு, தக்கைப்பூண்டு, விதைப்பு செய்து அதனை மடக்கி உழவு செய்யும் விவசாயிகளுக்கு, விதை

கிரயத்தில், 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், திரட்சியான நிலக்கடை உற்பத்தி செய்வதற்கு தேவையான ஜிப்சம், 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நெல், உளுந்து மற்றும் நிலக்கடலை பயிர்களை தாக்கும் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்தத் தேவையான பூச்சி மருந்துகளை பயிர்களுக்கு தெளிக்க உதவும் விசைத்தெளிப்பான்கள், 50 சதவீத மானிய விலையில், தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கவும், சிவப்பு கூண் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தவும் மானிய விலையில் பாசன கருவிகள் மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

## கோழி வளர்ப்பு பயிற்சி

ராஜபாளையம்,: ராஜபாளையம் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் விஞ்ஞான முறையில் நாட்டுகோழி வளர்ப்பு இலவச பயிற்சி செப்டம்பர் 29ல் நடைபெற உள்ளது. கொட்டகை அமைத்தல், தீவனம் மற்றும் பராமரிப்பு முறை, நோய் தடுப்பு முறை, விற்பனை வாய்ப்பு குறித்து பயிற்சி அளிக்க உள்ளனர். விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தங்களது பெயரை செப்டம்பர் 28 காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 04563 220 244 எண்ணிலோ, நேரிலோ பதிவு செய்யவேண்டும். முதலில் வரும் 25 நபர்களுக்கு மட்டும் பயிற்சி அளிக்க உள்ளதால் முன்பதிவு அவசியம். கால்நடை வளர்ப்போர், தொழில் முனைவோர், இளைஞர் மற்றும் மகளிர் சுயஉதவி குழுவினர் வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு மைய தலைவர் தனசீலன் தெரிவித்தார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை அணைகள், நீர் தேக்கங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு**

விழுப்புரம், : பருவ மழையின்போது, மாவட்டத்தில் உள்ள அணைகள், நீர் தேக்கங்கள் அமைந்துள்ள இடங்களில் ஆயுதங்களுடன் போலீசாரை பாதுகாப்பு பணிக்கு நிறுத்த வேண்டும் தீயணைப்பு துறையினர் தீயணைப்பு கருவிகள், ரப்பர் படகுகள் தயார் நிலையில் உள்ளதா என்பதை பார்த்து கொள்ள வேண்டும், என ஆட்சியர் லட்சுமி பேசினார். விழுப்புரம் மாவட்டத்தில் வட கிழக்கு பருவ மழையின் போது எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துறை அதிகாரி களுடன் மாவட்ட ஆட்சியர் லட்சுமி ஆலோசனை நடத்தினர். கூட்டக்தில் ஆட்சியர் லட்சுமி பேசியகாவது: அக்டோபர் மாதம் வட கிழக்கு பருவமழை துவங்க உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். புயல், மழை, வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்கள், நிவாரணம் வழங்க வேண்டிய மையம் ஆகியவற்றை தயார் செய்து வைத்திருக்க வேண்டும். வடகிழக்கு பருவ மழையின் போது ஏற்படும் மனித, கால்நடை உயிரிழப்பு, சாலைசேதம், பாலம், ஏரி உடைப்பு குறித்த தகவல்களை கட்டணமில்லா 1077 என்ற தொலைபேசியில் பொதுமக்கள் தெரிவிக்கலாம். மாவட்டத்தில் உள்ள அணைகள், நீர் தேக்கங்கள் அமைந்துள்ள இடங்களில் ஆயுதங்களுடன் போலீசாரை பாதுகாப்பு பணிக்கு நிறுத்த வேண்டும் தீயணைப்பு துறையினர் தீயணைப்பு கருவிகள், ரப்பர் படகுகள் தயார் நிலையில் உள்ளதா என்பதை பார்த்து கொள்ள வேண்டும். அதே போல் சுகாதார துறை, மீன்வளம், போக்குவரத்து, ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். பருவமழையால் ஏற்படும் சேதம், உயிரிழப்புகள் குறித்து உடனுக்குடன் அறிக்கை அளிக்க வேண்டும். இவ்வாறு ஆட்சியர் லட்சுமி பேசினார். கூட்டத்தில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ராஜசேகரன், கோட்டாட்சியர்

செந்தில்ஆறுமுகம், ஊராட்சி உதவி இயக்குநர்கள் செங்குட்டுவன், சாம்சங்தினகர்பாபு, ஏடிஎஸ்பி அனுசுயாடெய்சிளர்னஸ்ட் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## 1 லட்சம் பனை விதை நட இலக்கு

ஈரோடு, : வேகமாக அழிந்து வரும் பனை மரங்களை காக்கும் வகையிலும், நீர்நிலைகளில் பனை மரங்களை வளர்த்து கரைகளை பலப்படுத்தும் வகையில் பனை மரங்கள் வளர்ப்பை ஊக்குவிக்கும் பணி விரைவில் துவங்கப்பட உள்ளது.இதற்காக விரைவில் 1 லட்சம் பனை விதை நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து விவசாய சங்கங்கள், அமைப்புகள் மற்றும் வேளாண்துறை, பொதுப்பணித்துறை, வனத்துறை, புதிய போலீஸ் ஸ்டேசன் கட்ட போதிய வசதி இல்லாத இடம் தேர்வு கல்வித்துறை, ஊரகவளர்ச்சித்துறை மற்றும் சுற்றுச்சூழல்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட கலந்தாலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தி–ில் நடந்தது. கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் பிரபாகர் பேசியதாவது: கடும் வறட்சியையும் தாக்குப்பிடித்து மக்களுக்கு உண்ண உணவு தரும் வல்லமை கொண்ட பனை மரங்களை நமது முன்னோர்கள் நீர்நிலைகளான ஏரி, குளம், குட்டை, வாய்க்கால், வரப்புகளில் நட்டு வைத்து கரைகளை பலப்படுத்தி வந்தனர்.மாநில மரமாக உள்ள பனை மரம் நீர்பிடிப்பு பகுதிகளை காக்கும் தன்மை, நதிக்கரைகளை பலப்படுத்துதல் போன்றவற்றில் பெரிதும் பயன்பட்ட போதிலும் சமீபகாலமாக பனை மரங்கள் வேகமாக அழிந்து வருகின்றன. அழியும் நிலையில் உள்ள பனை மரங்களை காப்பாற்றவும், அதில் இருந்து கிடைக்கும் நுங்கு, பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றின் உபயோகத்தை அதிகப்படுத்தும் வகையிலும் தற்போது மாவட்டம் முழுவதும் பள்ளிகளில் உள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள், தேசிய பசுமைப்படை, என்எஸ்எஸ்., போன்ற அமைப்புகளில் உள்ள மாணவர்கள் மூலம் பனை விதைகள் வேகமாக சேகரிக்கப்பட்டு வருகிறது. பனை விதைகளை சேகரித்து கீழ்பவானி மெயின் வாய்க்கால், மாவட்டத்திலுள்ள ஏரி, குளங்களின் கரைகள், நெடுஞ்சாலை,

பஞ்சாயத்து சாலைகள் உள்ளிட்ட பல இடங்களில் அந்தந்த வட்டாரங்களில் உள்ள மக்கள், விவசாயிகள் பங்கேற்புடன் நட்டு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினர் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள வாய்க்கால்கள் மற்றும் குளக்கரைகளில் எங்கெல்லாம் பனை விதைகள் விதைக்க வாய்ப்புள்ளது என்பதையும், இதுபோல மற்ற துறைளும் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் எங்கெல்லாம் பனை விதைகளை விதைக்க முடியும் என்பதையும் கண்டறிய வேண்டும். பேரூராட்சி, நகராட்சி தலைவர்கள் தங்கள் பகுதிகளில் பனை விதைகள் விதைக்க பொதுமக்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பணியில் ஆர்வம் உள்ள தன்னார்வலர்கள் மற்றும் விவசாய சங்கங்களை சேர்ந்தவர்கள் மாவட்ட வன அலுவலர் நாகராஜன், சுற்றுச்சூழல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கீதா ஆகியோரை 9443370311, 9487041241 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் பேசினார். மாவட்டம் முழுவதும் 1 லட்சம் பனை விதைகளை நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**<u>கருங்கல்பாளையம் சந்தையில் 90 சதவீத மாடு விற்பனை</u>**

ஈரோடு, : ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் நேற்று மாடுகளின் வரத்து அதிகரித்து காணப்பட்ட நிலையில் 90 சதவீதம் மாடுகள் விற்பனையானது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் ஈரோடு மாட்டுச்சந்தைக்கு விற்பனை செய்வதற்காக மாடுகள், எருமைகளை கொண்டு வருகின்றனர். நேற்று ஈரோடு மாட்டுச்சந்தைக்கு 550 பசுக்கள், 500 எருமைகள், 200 வளர்கன்றுகளும் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. இவற்றை வாங்கி செல்வதற்காக ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா மற்றும் கேரளாவில் இருந்து அதிகளவில் வியாபாரிகள் வந்திருந்தனர். இதன் காரணமாக ஈரோடு மாட்டுச்சந்தையில் மாடுகளின் விற்பனை களை கட்டி காணப்பட்டது. செவலை, சிந்து, கிராஸ், எச்.எப்., எச்எப் கிராஸ் போன்ற கலப்பின மாடுகளின் விற்பனை அதிகரித்து காணப்பட்டது.

ஒரு நாளுக்கு 10 முதல் 40 லிட்டர் வரை கறவை திறனுள்ள மாடுகளை ஒரே இடக்தில் வாங்கி செல்ல இயலும் என்பகால் ஈரோடு மாட்டுச்சந்தையில் இருந்து மாடுகளை வாங்கி செல்ல வெளியூர் விவசாயிகளும், வியாபாரிகளும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். நேற்றைய மாட்டுச்சந்தையில் எச்.எப் ரகங்களை கர்நாடகாவை சேர்ந்த வியாபாரிகளும், செவலை, கிராஸ் ரக மாடுகளை ஆந்திர வியாபாரிகளும், சிந்து கிராஸ் போன்றவற்றை மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். மாட்டு சந்தை நிர்வாகத்தினர் கூறியதாவது: கடந்த சில வாரங்களாக விற்பனைக்காக கொண்டு வரப்படும் மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பாலுக்கு கட்டுபடியாகாத விலை கிடைக்காத காரணத்தாலும், தீவனங்களின் விலை உயர்வு காரணமாகவும் விவசாயிகள் அதிகளவி–ில் மாடுகளை விற்பனை செய்கிறார்கள். கடந்த சில வாரங்களாகவே விற்பனைக்கு கொண்டு வரப்படும் மாடுகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இந்த வார மாட்டுச்சந்தையில் 1250 பசு, எருமை, கன்றுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. கடந்த வாரத்தை விட இந்த வாரத்தில் 200 மாடுகள் கூடுதலாக விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. இவற்றை வெளியூர் விவசாயிகளும், வியாபாரிகளும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். 90 சதவீதம் மாடுகள் விற்பனையாகியுள்ளன. மாடுகளின் விலை உயரவில்லை. இவ்வாறு மாட்டு சந்தை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## வறட்சியில் கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற தொழில்நுட்ப ஆலோசனை

நாகை, : நாகை மாவட்டத்தில் தற்போது வறட்சியில் கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அனுராதா தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளார். நாகை மாவட்டத்தில் தற்போது நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடி நெற்பயிர்கள் போதிய தண்ணீர், மழை இன்றி பயிர் கருகும் தருவாயில் உள்ளது. பாதிப்பிற்கு

உள்ளாகும். நெற்பயிரை 7 முதல் 10 நாட்கள் வரை ஆரம்ப கட்ட வறட்சியிலிருந்து காப்பாற்ற, பி.பி.எப்.எம். என்ற மெத்தைலோட்ரோபிக் பாக்டீயா கரைசலை ஒரு ஏக்கருக்கு 200 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். எனவே, இந்த பாக்டீயா கரைசல் தேவைப்படும் விவசாயிகள், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் மூலம் பெறப்பட்டு ஒரு லிட்டர் ரூ.300க்கு விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை நேரடியாகவோ அல்லது 04365 246266 என்ற தொலைபேசி எண்ணையோ தொடர்பு கொண்டு ஆர்டரை பதிவு செய்து கொள்ளலாம். மெத்தைலோட்ரோபிக் பாக்டீயா கரைசலை தெளிப்பதால், பயிர்களுக்கு பயிர் வளர்ச்சி ஊக்கிகளான சைட்டோகைனின், ஆக்சிஜன்களை அளிக்கிறது. வறட்சியை தாங்கும் திறனை பயிர்களுக்கு அளிக்கிறது. இதனால் விதை முளைப்புத்திறன், நாற்றுகளின் வளர்ச்சி அதிகரிக்கும். பூக்கும் காலம், காய்களின் அறுவடை காலத்தை குறைக்கிறது. மேலும் தானியம், விதைகளின் நிறம் மற்றும் தரம் அதிகரிக்கும். மகசூல் 10 சதவீதம் வரை அதிகரிக்கும். பரிந்துரைக்கப்பட்ட அனைத்து பயிர்கள், மரங்கள், பூச்செடிகளில், பரிந்துரைக்கப்பட்ட விதை அளவை 50 மிலி மெத்தைலோட்ரோபிக் பாக்டீயா கரைசலில் நன்கு கலந்து 5 முதல் 10 நிமிடம் வரை நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். காலை அல்லது மாலை நேரத்தில் திரவ நுண்ணுயிரை தண்ணீரில் கலந்து இலைகள் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். பயிர்களின் முக்கிய வளர்ச்சி காலங்களான நாற்று பருவம், தூர் பிடிக்கும் பருவம், பஞ்சு கட்டும் பருவம், பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும். மீண்டும் 15 நாட்கள் கழித்து ஒரு முறை தெளிக்க வேண்டும் என சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அனுராதா தெரிவித்துள்ளார்.

## <u>மானியத்தில் வேளாண் கருவிகள்</u>

சிவகங்கை, : சிவகங்கைமாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: 2015 - 16ல் வேளாண் இயந்திரமயமாக்கல்

திட்டத்தின் கீழ் ஆதி திராவிட விவசாயிகள், சிறு, குறு மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு 50சதவீதமும் இதர விவசாயிகளுக்கு 40சதவீதம் கருவிகளின் அடிப்படை விலையில் மானியமாக வழங்கப்படும். மேற்கண்ட கருவிகளை அரசு மானியத்தில் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் 10(1), அடங்கல், நில வரைபடம், ரேஷன் கார்டு நகல் முதலிய ஆவணங்களுடன் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒட்டப்பட்ட விண்ணப்பத்தினை வழங்க வேண்டும். கூடுதல் விபரம் அறிய சிவகங்கை, காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை மற்றும் திருப்புவனம் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள் உதவி செயற்பொறியாளர்(வேளாண் பொறியியல் துறை) தொண்டி ரோடு, சிவகங்கை(தொலைபேசி எண், 04575-240288) அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். தேவகோட்டை, கண்ணங்குடி, சாக்கோட்டை, கல்லல், எஸ்.புதூர், சிங்கம்புணாரி, திருப்பத்தூர் ஒன்றிய விவசாயிகள் உதவி செயற்பொறியாளர்(வேளாண்மை பொறியியல் துறை) புகழேந்தி தெரு, சூடாமணிபுரம், காரைக்குடி (செல் எண், 94431 15220) அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். சிவகங்கை கலெக்டர் அலுவலக வளாகத்தில் செயல்படும் வேளாண் பொறியியல்துறை, செயற்பொறியாளர் அலுவலகத்தையும் (தொலைபேசி எண் 04575 240213) தொடர்பு கொண்டு விபரம் அறியலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ ரூ.200 உயர்வு ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை**



நாகர்கோவில், தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ ரூ.200 உயர்ந்து விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனையானது.

<u>விலை உயர்வு</u>

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டம் மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் வியாபாரிகள் பூக்களை விற்பனைக்காக கொண்டு வருகிறார்கள். இங்கு சில்லறையாகவும், மொத்தமாகவும் பூக்கள் விற்பனை செய்யப்படும். மார்க்கெட்டில் வியாபாரிகள், விவசாயிகள் என கூட்டம் அலைமோதும். நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.300–க்கு விற்கப்பட்ட மல்லிகை பூ, நேற்று ரூ.200 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை செய்யப்பட்டது. மல்லிகை பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் '' இன்று (நேற்று) வெள்ளிக்கிழமை என்பதால் மல்லிகை பூவின் தேவை அதிகமாக இருந்தது. அதே சமயம் மல்லிகை பூவின் வரத்து குறைவாக இருந்தது. இதனால் மார்க்கெட்டிற்கு வந்த பூக்களை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். இதனால் விலை உயர்ந்து காணப்பட்டது'' என்று கூறினார்.

<u>பூக்கள் விலை நிலவரம்</u>

மேலும், பிச்சி ரூ.400–க்கும், முல்லை ரூ.300–க்கும், கனகாம்பரம் ரூ.200–க்கும், சிவந்தி ரூ.120–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.100–க்கும், மருக்கொழுந்து ரூ.100–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.100–க்கும், சம்பங்கி ரூ.80–க்கும், கொழுந்து ரூ.80–க்கும், பட்டன்ரோஸ் ரூ.60–க்கும், அரளி ரூ.50–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.35–க்கும், கேந்தி ரூ.30–க்கும், வாடாமல்லி ரூ.25–க்கும், மாம்பழ கேந்தி ரூ.25–க்கும், கோழிப்பூ ரூ.20–க்கும், துளசி ரூ.20–க்கும், பச்சை ரூ.5–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.150–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.20–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## <u>3½ லட்சம் டன் நெல் கொள்முதல் கடந்த ஆண்டை விட அதிகம்</u>

தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 3½ லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட அதிகமாகும். நெல்கொள்முதல்

தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டு இதுவரை 26 ஆயிரத்து 400 எக்டேரில் குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் மறு ஆண்டு செப்டம்பர் 30-ந்தேதி வரை நெல் கொள்முதல் செய்யப்படும் காலமாகும். மத்தியஅரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் 2014-15-ம் ஆண்டிற்கு கடந்த 2014-ம் ஆண்டு அக்டோபர் 1-ந்தேதி முதல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அவற்றின் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 21-ந்தேதி வரை தஞ்சை மாவட்டத்தில் 3 லட்சத்து 53 ஆயிரத்து 375 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் தற்போது 78 நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப அவ்வப்போது நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைக்கு ஏற்ப திறக்கப்பட்டுவருகிறது.

கடந்த ஆண்டை விட அதிகம் தஞ்சை தாலுகாவில் 33 ஆயிரத்து 710 டன் நெல்லும், திருவையாறு தாலுகாவில் 44 ஆயிரத்து 102 டன் நெல்லும், ஒரத்தநாடு தாலுகாவில் 1 லட்சத்து 11 ஆயிரத்து 203 டன் நெல்லும், பட்டுக்கோட்டை தாலுகாவில் 51 ஆயிரத்து 968 டன் நெல்லும், பேராவூரணி தாலுகாவில் 13 ஆயிரத்து 937 டன்னும், கும்பகோணம் தாலுகாவில் 27 ஆயிரத்து 365 டன் நெல்லும், திருவிடைமருதூர் தாலுகாவில் 21 ஆயிரத்து 24 டன் நெல்லும், பாபநாசம் தாலுகாவில் 41 ஆயிரத்து 491 டன்னும், சிறப்பு கொள்முதல் குழு மூலம் 8 ஆயிரத்து 575 டன் நெல்லும் என மொத்தம் 3 லட்சத்து 53 ஆயிரத்து 375 டன் நெல் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் கடந்த 21-ந்தேதி வரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட அதிகமாகும். ஆனால் 2014-15-ம் ஆண்டிற்கு 4 லட்சத்து 40 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2013-14-ம் ஆண்டில் 3 லட்சத்து 1,932 டன் டன்னும், 2012-13-ம் ஆண்டில் 2

லட்சத்து 29 ஆயிரத்து 873 டன்னும் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

**திருப்பூர் டவுன்ஹாலில் வெளிநாட்டு பறவைகள் கண்காட்சி**



திருப்பூர் டவுன்ஹாலில் வெளிநாட்டு பறவைகள் கண்காட்சி மற்றும் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. இந்த கண்காட்சியில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் புறாக்கள், கிளிகள், லவ் பேர்ட்ஸ், சேவல் உள்ளிட்ட பறவைகள் இடம் பெற்றுள்ளன. கண்காட்சியில் அந்த பறவைகள் உயிர் வாழும் நாட்கள் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவைகள் பற்றிய குறிப்புகளும் அங்கு வைக்கப்பட்டுள்ளன. இதேபோல் கண்காட்சியில் உள்ள வெளிநாடுகளில் காணப்படும் அரிய வகை எலிகள், முயல்கள் மற்றும் இந்தியாவின் 4 கொம்பு ஆடு, அசாம் மாநிலத்தை சேர்ந்த 1½ அடி உயரமுள்ள ஆடு ஆகியவை பொதுமக்களை பெரிதும் கவரும் வகையில் உள்ளன. இதுமட்டுமின்றி பொருட்காட்சியில் வீட்டு உபயோக பொருட்கள் அடங்கிய 20–க்கும் மேற்பட்ட அரங்குகளும், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விளையாடி மகிழும் வகையில் ஏராளமான ராட்டினங்கள் மற்றும் விளையாட்டு சாதனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அறுசுவை உணவு வகைகளும் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன. அடுத்த மாதம் 12–ந்தேதி வரை நடைபெறும் இந்த கண்காட்சி தினமும் மாலை 4 மணிக்கு தொடங்குகிறது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## தேனி மாவட்டத்தில் தொடர் மழை: வைகை அணை நீர் மட்டம் ஒரே நாளில் 1½ அடி உயர்வு



கம்பம், செப். 26– முல்லைப் பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியிலும் தேனி மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் பெரியாறு மற்றும் வைகை அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. வைகை அணை நீர் மட்டம் நேற்று 40.68 அடியாக இருந்த நிலையில் இன்று காலை 42.36 அடியாக உயர்ந்துள்ளது. இது கிட்டத்தட்ட சுமார் 1½ அடியாகும். இதே போல் நேற்று 697 கன அடி தண்ணீர் வந்த நிலையில் இன்று காலை அணைக்கு வரும் தண்ணீரின் அளவு 1763 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர் இருப்பு 1148 மில்லியன் கன அடியாக உள்ளது. அணையில் இருந்து மதுரை குடிநீர் தேவைக்காக 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பெரியாறு அணையின் நீர்மட்டம் 115.50 அடியாக உள்ளது. நீர் வரத்து 705 கன அடி. திறப்பு 700 கன அடி. மஞ்சளாறு நீர் மட்டம் 50.50 அடி. நீர் வரத்து 94 கன அடி. சோத்துப்பாறை நீர் மட்டம் 85.28 அடி. நீர் வரத்து 7 கன அடி. திறப்பு 3 கன அடி.

தேக்கடி 8.2, கூடலூர் 45, சண்முகா நதி அணை 6, உத்தமபாளையம் 23.8, வீரபாண்டி 38, வைகை அணை 12.2, மஞ்சளாறு 10, சோத்துப்பாறை 10, கொடைக்கானல் 8 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது.